T.C.027

074/DM/26

Register Number									

DEPARTMENTAL EXAMINATIONS

SPECIAL LANGUAGE TEST FOR OFFICERS OF THE EDUCATION DEPARTMENT HIGHER STANDARD – FIRST PAPER – TAMIL (TEXT AND TEXTUAL GRAMMAR)

(Without Books)

Maximum Time : 2.30 hours Maximum Marks : 100

பகுதி – I

எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடை தருக. (6 × 4 = 24)

1. பலகை என்பதைத் தொடர் மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

2. மென்மையான மேகங்கள், துணிச்சலும் கருணையும் கொண்டு வானில் செய்யும் நிகழ்வுகளை எழுதுக.

3. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்கள் யாவை?

4. மொழிபெயர்ப்பின் பயன் குறித்து எழுதுக.

5. ஏதேனும் நான்கு வழுவமைதிகளைச் சான்றுடன் விளக்குக.

6. தமிழ் மொழிக்குக் கலைஞர் செய்த சிறப்புகளுள் நீங்கள் அறிந்தவற்றை எழுதுக.

7. சொற்பெட்டியில் கண்டு எழுதுக.

   (தங்கும், மரவீடு, கவிழும், தயங்கும், அவிழும், தோற்பவர், பார்ப்பவர், மரம்வீடு)

   (அ) மலை முகட்டில் மேகம் _____.

   அதைப் பார்ப்பவர் மனங்கள் சொல்லத் _____.

   (ஆ) விரட்டாதீர்கள் – பறவைக்கு _____.

   வெட்டாதீர்கள் – மனிதருக்கு அவை தரும் _____.

   (இ) வாழ்க்கையில் _____ மீண்டும் வெல்வர் – இதைத் தத்துவமாய்ப் _____, முயற்சி மேற்கொள்வர்.

   (ஈ) காலை ஒளியினில் மலரிதழ் _____ ; சோலைப் பூவினில் வண்டினம் _____.

[Turn over

8. பின்வரும் உரையாடலில் உள்ள பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.

(அ) "அங்ஙனக்குள்ளயே டீ சாப்டுட்டு, பேப்பரப் படிச்சிக்கிட்டு இரு.

நா வெரசா வந்துருவேன்".

(ஆ) "ரொம்ப சின்ன வயசுல பார்த்ததுண்ணே! அப்பம் அவனுக்கு மூணு வயது இருக்கும்!"

(இ) "தம்பீ! எங்க நிக்கிறே"?

(ஈ) "அண்ணே! சம்முவத்தையும் கூட்டிக்கிட்டு வாங்கண்ணே ! அவனெப் பாத்தே ரொம்ப நாளாச்சு!"

பகுதி – II

எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடை தருக. $(6 \times 6 = 36)$

1. மருதநிலத்தில் இயற்கை கொலு வீற்றிருக்கும் காட்சியைக் கம்பரின் கலைநயத்துடன் எழுதுக.

2. உவமை அணியை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

3. வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளி நகையாடுவது குறித்துக் குறளின் கருத்து யாது.

4. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

5. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில சான்றுகள் தருக.

6. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

7. மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.

(அ) மனக்கோட்டை

(ஆ) கண்ணும் கருத்தும்

(இ) முதலைக் கண்ணீர்

(ஈ) அள்ளி இறைத்தல்

(உ) ஆறப்போடுதல்

(ஊ) ஆயிரங்காலத்துப் பயிர்.

பகுதி – III

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. $(4 \times 10 = 40)$

1. புயலிலே ஒரு தோணி கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும், அடுக்குத் தொடர்களும், ஒலிக் குறிப்புச் சொற்களும், புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன.

2. காற்று மாசுபாட்டைத் தடுக்கும் வழிமுறைகளை விவரித்து எழுதுக.

3. உங்கள் இல்லத்திற்கு வந்த விருந்தினருக்கு (உறவினருக்கு) நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

4. பழமொழிகளை நிறைவு செய்க.

   (அ) உப்பில்லாப் _____

   (ஆ) ஒரு பானை _____

   (இ) உப்பிட்டவரை _____

   (ஈ) விருந்தும் _____

   (உ) அளவுக்கு _____

   (ஊ) கல்லாடம் படித்தவரோடு _____

   (எ) கூழானாலும் _____

   (ஏ) கந்தையானாலும் _____

   (ஐ) வினை விதைத்தவன் _____

   (ஒ) தம்பி உடையான் _____

5. போராட்டக் கலைஞர் - பேச்சுக் கலைஞர் - நாடகக்கலைஞர் - திரைக் கலைஞர் - இயற்றமிழ்க் கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.